# அகநானூறு முல்லைத்திணைப் பாடல்களில் அகத்திணைக் கொள்கைகள்

***பெ.முத்துலெட்சுமி***
***ஆய்வியல் நிறைஞர்***
***சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி***
***ஒட்டன்சத்திரம்***

**முன்னுரை**

புலவர்கள் பலரால் பாடப்பெற்ற பாடல்களான தமிழ் இலக்கியச் செல்வங்கள் கடல்கோள்கள், காலப்பழமை, ஏடுகளாதலின் கரையானரித்தல், மக்களின் அறியாமை இவற்றால் அழியத் தொடங்கின. கடல் கோள்களால் அழிந்தவையே மிகுதி. போனவை போக இருந்தவற்றைக் காக்கும் முயற்சியில் தமிழறிஞர்கள் ஈடுபட்டனர். அவற்றைப் பலவிதமான மலர்களைத் தொகுப்பது போன்று தொகுத்தனர். அவ்வாறு தொகுக்கும் போது அடிவரையறை, பொருளமைப்பு, பாவகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகுத்தனர். அவ்வாறு தொகுக்கப்பட்டவையே எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் ஆகும். அவற்றுள் எட்டுத்தொகை நூல்களை எண்பெருந்தொகை எனவும் பாராட்டிக் கூறுவர். பல ஏடுகள் கிடைத்தும் பாடியவர் பெயர் தெரியாததால், பாடலில் வரும் உவமை, அடைமொழி ஒரு சொல் போன்றவற்றால், அப்புலவர்களுக்குப் பெயர்சூட்டியுள்ளனர் அணிலாடு முன்றிலார், செம்புலப் பெயல்நீரார், குப்பைக்கோழியார், காக்கை பாடினியார் போன்ற பெயர்கள் அத்தகையன.

**முதற்பொருள்**

முதல், கரு, உரி என்ற மூன்று பொருள்கள் முதல் இடத்தை வகிப்பது முதற் பொருளாகும் பிற பொருள்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக நிற்பது முதற்பொருளாகும். முதற்பொருள், கருப்பொருள் தோன்றுவதற்கு அடிப்படையாக நிற்றலின் முதற்பொருள் என்றழைக்கப்பட்டது. நிலம், பொழுது என முதற்பொருள் இருவகைப்படும் என்பதைத் தொல்காப்பியர்,

**முதல் எனப் படுவது நிலம்பொழு திரண்டின்**
**இயல்பென மொழிய இயல்புணர்ந் தோரே (தொல், பொருள், அகத்., நூ.4.)**

என்னும் நூற்பா வழி விளக்குகிறார்.

**நிலத்தைப் பகுக்கும் முறை**

நிற்பதற்கு இடம் அளிப்பதால் நிலம் எனக் காரணக் குறியால் குறித்தனர். நானிலப் பாகுபாட்டையும், அந்நிலங்களுக்குரிய தெய்வங்களையும் தொல்காப்பியர்,

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய காடுறை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே (தொல் பொருள், அகத்., நூ.5)**

என்னும் நூற்பாவழி எடுத்துரைக்கிறார். பாலைக்கென நிலம் கிடையாது. முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் மிகுந்த வெப்பத்தின் காரணமாகத் தன் தன்மைகளை இழந்து நிற்கும் போது பாலை எனப்பெயர் பெறும்.

**நிலம்**

**‘சிறு கரும் பிடவின் வெண் தலைக்குறும்புதல்,**
**கண்ணியின் மலரும் தண்நறும் புறவில், ‘அக-34, வரி-1,2)**

குளிர்ச்சியுடைய நறுமணம் கமழும் முல்லை நிலத்தில் கரிய பிடவம் செடியின் வெண்மையான உச்சியுடைய குரியபுதர் மாலை போன்று மலர்ந்திருக்கும் என்று முல்லை நிலத்தை பற்றி கூறுகிறார்.

**பொழுதுகள்**

முதற்பொருளின் ஒரு பகுதியாக விளங்குவது பொழுதாகும். அகப்பொருள் நூலார் காலத்தைப் பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படுத்துவர். ஓர் ஆண்டைப் பலகூறாகப் பிரிப்பது பெரும் பொழுதாகும். ஒரு நாளை பலகூறுகளைாகப் பிரிப்பது சிறுபொழுதாகும். தமிழ் முன்னோர் பெரும்பொழுதையும் சிறுபொழுதையும் ஆறாகப்பகுத்தனர். சிறுபொழுதை ஐந்தாகக் கொள்பவர்களும் உண்டு. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன பெரும்பொழுதுகளாகும். காலை, நண்பகல், மாலை யாமம், வைகறை, விடியல் என்பன சிறுபொழுதுகளாகும்.

**நிலங்களுக்குரிய பொழுதுகள்**

அறுவகைப் பெரும் பொழுதுகளும் சிறுபொழுகளும் ஐவகை நிலங்களுக்கு உரிமை உடையனவாகப் பகுக்கப்பட்டுள்ளன. முல்லைத்திணைக்குக் கார்காலமும் மாலையும் உரியன. குறிஞ்சிக்குக் கூதிர்காலமும் நள்ளிரவாகிய யாமும் சிறந்தன. குறிஞ்சிக்கு முன்பனிக் காலமும் உரியதாகும். மருதத்திற்கு அறுவைப் பெரும் பொழுதுகளோடு வைகறை, விடியல் என்னும் இரண்டு சிறுபொழுதுகளும் உரியனவாகும். அறுவகைப் பெரும் பொழுதுகளும் ஏற்பாடாகிய காலைப் பொழுதும் நெங்தலுக்குரியனவாகும். வேனிலும் நண்பகலும் பாலைத்திணைக்கு உரியனவாகும்.

**பெரும் பொழுது**

முல்லை வாழ்க்கையாகிய நாடகத்திற்குக் கார்கால வருணனையும், மாலைநேர வருணனையும் ஆடரங்காக அமைந்துள்ளன. ஆவணித் திங்களும், புரட்டாசித் திங்களும் ஆகிய மழைபெய்யும் காலமே கார்காலம் என்று இளம்பூரணர் உரைக்கிறார். கார்காலம் என்பது முன்மழைக்காலம் (The early rain Season) எனவும் கூறலாம்.

**பெரும் நிலப்பரப்பு மணம் பரப்பவும் (கலி 109.1)**

என்ற பாடல் வரிகள் கலித்தொகையில் பெரும் பொழுது பற்றி இடம் பெறுகிறது.

**காரும் ஆர்கலி தலையின்று தேரும்**
**ஒவத்தன்ன கோவச் செந்நிலம் (அக-54, வரி-3.4)**

என்ற அகநானூற்று வரிகளின் மூலம் கார்காலப் பொழுது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**கருப்பொருள்**

முதற்பொருளை அடிப்படையாகக் கொண்டு அவ்வந் நிலங்களில் பிறக்கின்ற பொருள்கள் பலவாகும். அவற்றைக் தொல்காப்பியர்.

1. தெய்வம், 2. உணவு, 3. விலங்கு 4. மரம், 5. புறவை, 6. புறை, 7. தோழில், 8. யாழ் என்பவற்றோடு பிறவும் கருப்பொருளாகும் எனக் கூறுகிறார்.

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் கருவென மொழிப**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப (அகப், விளக், நூ.19.)**

ஊர்:

மக்கள் சேர்ந்து கூட்டாக வாழ்ந்த இடம் ஊர் எனப்பட்டது. முல்லை நில மக்கள் வாழ்ந்த இடம் பாடி என்றும் சேரி என்றும் அழைக்கப்பட்டது.

**எல்லா! இ.'.தொன்று கூறு-குறும்பு இவர்**
**புல்லினத் தார்க்கும், குடட் டவர்க்கும், 'எம்**
**கோல்வேறு கொடல் குறை எனக் கோவினத்தூர்**
**பல்வேறு பெய்தார் தொழு. (கலித். முல்லைக்கலி.ப.289)** என்ற பாடலடி முல்லை நிலத்தின் பற்றி எடுத்துக்கூறுகிறது.

**புனிபுல் வைப்பின் எம் சிறுநல் ஊரே (அகம்-394, வரி-16)**

ஊர் என்பது ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்ப பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

**உணவு**

பண்டையத் தமிழர்கள் சுவைமிக்க உணவுகளைச் சமைப்பதில் தேர்ந்திருந்தனர். அவரவர் வாழ்ந்த நிலத்திற்கேற்ப உணவு வேறுபட்டது. காடு நிலமாகிய நிலத்திற்கு வரகு, சாமை, குதிரை, வாலி போன்றவை உணவுப் பொருள்களாகும்.

**கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண் (அகம்-384, வரி-6)** அகநானூறு பாடலில் வரகுப்பயிர் பற்றி செய்தி இடம் பெறுகிறது.

**உரிப்பொருள்**

உரிப்பொருள் என்பது நம் பிறப்போடு ஒட்டியது. உலகப் பிறப்பை அருளுவது, யாண்டும் பரந்தது, எண்ணம் சொல் செயல் எல்லாம் இனிப்பது எது? காதல், காதல், காதல். இக்காதலலே இயல்பான பாலுணர்ச்சியே அகத்திணை இலக்கியத்தின் பாடுபொருளாம். இதனை அகம் எனவும், புறம் எனவும் இருவகைப்படுத்துவார்கள் அகம் எனச் சொல்லப்படுவது, புணர்தல், பிரிதல், இருந்தல் இரங்கல், ஊடல் என்றும் கைக்கிளை, பெருந்திணை என ஏழு வகைப்படும். இதனைத் தொல்காப்பியர்.

**'புணர்தல் பிரிதல் இருந்தல் இரங்கல்**
**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் தணைக்குரிப் பொருளே" (தொல். பொருள். அகத்.,-16)**

**ஒழிகுலை அன்ன திரி மருப்பு ஏற்றொடு**
**கணைக்கால் அம்பிணைக் காமர் புணர்நிலை (அக-134, வரி-12,13)** என்னும் நூற்பாவில் எடுத்துரைக்கிறார்.

ஆண்மான்களோடு திரண்ட கால்களையுடைய பெண் மான்கள் விரும்பி மகிழ்வதை எடுத்து காட்டுகிறது.

தலைவன், தலைவி இருவரின் காதல்உணர்வையும், கற்புத்தன்மையையும் எடுத்து விளக்கிறது. ஒருவர் மற்றொரு ஒருவர் மேல் கொண்ட காதலை வெளிப்படுத்துகிறது.

**முல்லைத்திணையின் உரிப்பொருள்**

தலைவன், தலைவியை விட்டுப் போரின் காரணமாகவோ அல்லது பொருளின் காரணமாகவோ பிரிந்து செல்லும் நிலை ஏற்படுகிறது. தலைவன் வரும்வரை ஆற்றியிருக்கும் தலைவியின் நிலையினைச் சொல்வதே முல்லை ஒழுக்கம் ஆகும். முல்லைத்திணையின் உரிப்பொருளாக விளக்கம் இருத்தலும் அதனுடைய நிமித்தங்கள் ஆகியவற்றில் தலைமகளின் கற்பு நிலையைக் காட்டுகிறது. வேளாண்மை நிலத்தில் இருக்கும் முல்லை மலர்கள் கற்பிற்கு அறிகுறியாக விளங்கியிருக்கின்றன.

**கூற்றுக்குரியோர்கள்.**

தொல்காப்பியர் அகத்திணையில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு கூற்றுக்குரியோரை மூன்று வகைகயாகப் பிரித்துச் சொல்கின்றார்.

1) களவிற்குரியவர்கள் 2. கற்பிற்குரியவர்கள் 3. கொண்டெடுத்து மொழியப் பெறுபவர்கள் ஆவர்.
கற்பில் கூற்று நிகழ்த்துவதற்குரியவர்கள்:

**'பாணன் கூத்தன் விறலி பரத்தை**
**யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்**
**பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா**
**முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகை இத்**
**தொன்னெறி மரபிற் கற்பிற்குரிய" (தொல். பொருள். செய்யு., நூ.177)**

பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய ஆறு பேரும் கற்புக்காலத்தில் கூற்றுக்குரியவர்கள்.

**கூற்று**

அகப்பாட்டு உறுப்புகளில் ஒன்று கூற்று என்பதாகும். இதணைக் குறித்து அகப்பொருள் விளக்கம் பின்வருமாறு பேசுகின்றது.

**திணையே கைகோள் கூற்றே கேட்போர்**
**இடனே காலம் பயனே முன்னம்**
**மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென்று**
**அப்பால் ஆறிரண் டகப்பாட்குறுப்பே**

அகப்பாட்டு உறுப்புகள் பன்னிரெண்டு, அவற்றுள் ஒன்று கூற்று என்பதாம். இதனைத் தொல்காப்பியர்

1. களவில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள்
2. கற்பில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள்

என விளக்குகிறார். இதைப் போலவே அகப்பொருளும் சொல்கிறது.

**வினைமுற்றிய தலைவன் நெஞ்சிற்குச் சொல்லியது**

வினமுற்றிய தலைவன் நெஞ்சிற்குச் சொல்லியது என்னும் துறையில் அகநானூறு 24.144 ஆகிய எண்களைக் கொண்ட இரண்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

**வயங்கு கதிர் கரந்த வாடை வைகறை**
**விசும்பு உரிவது போல் வியன இடத்து ஒழுகி**
**மங்குல் மாமழை தென்புலம் படரும்**
**பனி இருங் கங்குலும் தமியள் நீந்தி**
**தம் ஊரோளே நன்னுதல் யாமே (அகம்-24, வரி-6-10)**

மனமே மேகம் ஒலி எழுப்பவும் குமிழ மலர்கள் பொன்னால் செய்த குழை போலத் தொங்க நம் காதலியின் ஊர்க்குப் பழி கெடுமாறு நாம் செல்வதற்கு காடுகள் நல்ல பதமும் செவ்வியும் கொண்டு இருந்தன எனத் தலைவன் தன் உள்ளத்துக்குச் சொன்னான்.

**துறை என்பது குறித்து அகப்பொருள் விளக்கம்**

**உரைப்போர் கேட்போர் உண்மையின்றி**
**உரைக்கும் கவியே உரைப்பது துறையே (நம்பி, விளக்கம்.,நூ-234)**

என்னும் நூற்பாவின் மூலம் உரைப்போர்,கேட்போர் பற்றி ஆசிரியரை உரைப்பது துறை ஆகும். களவு வாழ்வை குறிஞ்சித்திணை சொல்வது போல கற்பு வாழ்வை முல்லத்திணை சொல்கிறது.

**தோழி தலைமகளுக்குப் பருவம் காட்டி வற்புறுத்தியது**

வினையின் காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கிறான்.அவன் வினையை முடித்துக் கொண்டு திரும்பி வருவான் என்பதைத் தோழி கார்க்காலத் தொடக்கத்தைக் கண்டு சொல்வதாக அமைந்துள்ளது

**தாதுஉண் பறவை பேதுறல் அஞ்சி**
**மணிநா ஆர்த்த மான்வினத் தேரன்**
**உவக்காண் தோன்றும், குறும்பொறை நாடன்**
**கறங்குஇசை விடிவின் உறந்தைக் குணாது**
**நெடும் பெருங்குன்றத்து அமன்ற காந்தன் (அக-4, வரி-11-15)**

கார்பருவம் வந்ததைப் பார்த்த தோழி அதனைத் தலைவிக்குச் சொல்லி தலைவன் விரைந்து வருவான் எனக் கூறுவது. மழை பெய்ததால் முல்லைநிலக்காடுகள் எல்லாம் செழிப்புற்றுப் பூக்கள் எல்லாம் அழகுடன் திகழ்ந்தன. பூக்கள் தோறும் வண்டுகள் நீண்ட ஓசையினையுடைய (நெட்டெழுத்தின்) எழுத்தின் ஒலியின் பெயரில் விருப்பம் ஏற்பட்டதால் பண்ணானது அவ்வொலிக்கு ஏற்றதுபோல ஒலித்துக்கொண்டிருக்கும், இந்த பருவத்தில் தலைவன் வந்து விடுவான் எனத் தோழி தலைவிக்கு கூறுவதாக இத்துறை அமைந்துள்ளது.

**உவமை**

உவமை என்பது அணிகளுக்கெல்லாம் தாய் போன்றது. உவமையிலிருந்து தான் ஏனைய உத்திகள் வந்தன என்று சொல்வார்கள்.

**வினைபயன் மெய்யுரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமைத் தோற்றம் (தொல். பொருள். உவமை. நூ.1)**

தொழிலும்,பயனும்,வடிவம்,திறனும் என்று கூறப்பட்ட நான்குமே அப்பாகுபாட்டின் வந்த உவமைக்கண் புலனாகும்.

**முல்லைப்பாடலில் உவமைப் பெறும் இடம்**

**கொன்றை ஆம் குழலர் பின்றைத் தூங்க**
**மனைப்பினைப் படரும் நனைநகு மாலை, (அகம் - 54, வரி - 11,12)**

என்ற அடிகளின் மூலம் மகளிரின் கூந்தலைப் போல, புதிய பூக்களைக் கொண்ட கொன்றை மரம் என்பதைத் தெரிவிக்கிறது.

**உள்ளுறை**

உள்ளுறையாவது என்ன என்பதற்குத் தனியே இலக்கணம் கூறவில்லை தொல்காப்பியர்.ஆனால் உள்ளுறையுவமம் என்பதற்கு

**உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென**
**உள்ளறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம் (தொல். பொருள். அகத். நூ-49)**

உள்ளுறுத்து கருதும் பொருளினை இதனோடு ஒத்து முடிக என உள்ளறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம் எனப்படும்.

**மறியுடை மடப்பினை தழ்கு புறவின்**
**திரிமருப்பு இரலை பைம்பயிர் உகள, (அகம்-314, வரி - 5,6)**

என்ற அடிகளின் மூலம் உள்ளுறை எடுத்துக்காட்டப்படுகிறது.

**முடிவுரை**

அகநானூறு முல்லைத்திணைப் பாடல்களைப் பற்றி அகத்திணைக் கொள்கை விளக்குகிறது. அன்பின் ஐந்திணை என்றழைக்கப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை என்னும் ஐந்திணைக்கும் பின்புலமாக அமைந்த பொருள்கள் முதல், கரு, உரி என்ற மூன்றாகும் முல்லைத்திணையில் அமைந்த கூற்றுகளைத் தொகுத்துத்துறை அமைப்பாக விளக்கியுள்ளனர். உவமை, உருவகம், உள்ளுறை, போன்றவை குறிப்பாகவும் வெளிப்படையாகப் பொருளைப் புலப்படுத்தும் இவ்வுத்திகள் தமிழர்தம் புலமையை அறிவதற்கும் தனிநாகரிக அகவாழ்வைப் பற்றி அறிவதற்குப் பயன்படுகின்றன.

**பார்வை நூல்**

1. இராமசுப்பிரமணியம்,வ.த., அகநானூறு (மூலமும் தெளிவுரையும்)
2. இளம்பூரணர்,(உரை), தெல்காப்பியம் பொருளதிகாரம்
3. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு,
4. இளவரசு,சோம., இலக்கிய வரலாறு
5. திருஞானசம்மந்தம்,தி., அகப்பொருள் விளக்கம்